உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில்

# மாபெரும் தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சி: கலெக்டர் மு.அருணா, சைலேந்திரபாபு பங்கேற்பு



**ஊட்டி,செப்.22-**

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர்; பண்பாட்டு மையத்தில் கலெக்டர் மு.அருணா தலைமையில்; நடைபெற்ற மாபெரும் தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியில் தமிழ்நாடு காவல்துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில், கலெக்டர் தெரிவித்ததாவது:-

தமிழ் இணையக்கல்விக் கழகமும் மாவட்ட நிர்வாகமும் ஒன்றிணைந்து 'மாபெரும் தமிழ்க் கனவு' என்னும் தமிழ்மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வைக் கடந்த ஆண்டில் சிறப்பாக நடத்தி முடித்தது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 100 கல்லூரிகளில், 200 சொற்பொழிவுகள், 1,000 கல்லூரிகளை சேர்ந்த ஏறத்தாழ 1 லட்சம் மாணவர்களை சென்றடையும் வண்ணம் நிகழ்வு நடத்தப்பட்டது. இதன் 100-வது நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இந்நிகழ்ச்சி ஒவ்வோரு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும் என அறிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க அடுத்த கட்ட நிகழ்ச்சியானது 2023 ஜூலை மாதம் தொடங்கியது. உலகின் செழித்தோங்கிய பண்பாடுகளில் முதன்மையான தமிழ்ப்பண்பாட்டின் பெருமைகளையும் வளமையையும் அது எதிர்கொண்ட சவால்களையும் மாணவர்களாகிய உங்களிடம் கொண்டு சேர்ப்பதற்கானதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

நமது பண்பாட்டின் பெருமையை இளையதலைமுறைக்கு, குறிப்பாக கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு உணர்த்துவது ஆரோக்கியமான எதிர்கால கட்டமைப்பின் முக்கியமான பகுதியாகும். எனவே, தமிழ்நாடு முழுவதும் உள்ள 200 கல்லூரிகளில் தமிழர்மரபும் நாகரிகமும், சமூகநீதி, பெண்கள் மேம்பாடு, தொல்லியல் ஆய்வுகள், தமிழ்நாட்டின் தொழில்வளர்ச்சி, கல்விப்புரட்சி, அரசின் திட்டங்கள், அவற்றை செயல்படுத்தும் முறைகள் முதலிய தலைப்புகளின் கீழ் சிறந்த சொற்பொழிவாளர்களை கொண்டு மாபெரும் தமிழ்க்கனவு சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மாணவ, மாணவியர்கள் தமிழ் பண்பாடு மற்றும் கலாச்சாரங்களை அறிந்து, அதன் வழிகளை பின்பற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு காவல்துறை மேனாள் தலைமை இயக்குநர் பேசியதாவது :-

இளைஞர்கள் திறமைகள் மற்றும் நல்ல சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கல்லூரியில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் மாணவ, மாணவிகள் தங்களுடைய பங்குபெற்று தங்கள் திறமைகளை வெளிக்கொண்ட வர வேண்டும். திறன் பயிற்சியினை வளர்த்துக் கொண்டால் வேலை வாய்ப்புகள் அதிகம் உள்ளது. ஆகவே திறன் பயிற்சி வளர்த்துக் கொள்ள வேண்டும். தினமும் காலை 5 மணிக்கு எழுந்திருக்க வேண்டும், பத்து நிமிடம் தியானம் மேற்கொள்ள வேண்டும், ஒரு மணி நேரம் செய்தித் தாள்களை படிக்க வேண்டும். ஒரு மணி நேரம் உடற்பயிற்சி மேற்க்கொள்ள வேண்டும், நேரத்தினை சரியான முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இது போன்று ஐந்து செயல்களை கல்லூரி மாணவ, மாணவிகளாகிய நீங்கள் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என மேனாள் தலைமை இயக்குநர் தமிழ்நாடு காவல்துறை தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, மாபெரும் தமிழ் கனவு, தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்ச்சியில் நடைபெற்ற சொற்;பொழிவு நிகழ்வில் கலந்து கொண்ட 11 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் புத்தகங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு காவல்துறை மேனாள் தலைமை இயக்குநர் ஆகியோர் வழங்கி பாராட்டினார்கள்.

முன்னதாக, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின நலத்துறை, பள்ளிக் கல்வித்துறை, நீலகிரி மாவட்ட நூலக ஆணைக் குழு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, மாவட்ட முன்னோடி வங்கி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு காவல்துறை மேனாள் தலைமை இயக்குநர் ஆகியோர் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷபிலா மேரி, உதவி ஆணையர் (கலால்) சதீஷ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சண்முக சிவா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அலுவலர் செல்வகுமார், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் வெங்கடேஷ், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார் சக்கரபாணி, மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, மாவட்ட நூலக அலுவலர் வசந்தா மல்லிகா, உதகை வருவாய் கோட்டாட்சியர் மகாராஜ், உதகை வட்டாட்சியர் சரவணக்குமார் எமரால்டு ஹைட்ஸ் மகளிர் கல்லூரி முதல்வர் சுஜாதா, உதகை அரசினர் கலைக்கல்லூரி பேராசிரியர் ஷோபனா உட்பட உள்ளிட்ட கல்லூரி மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்டம்

# கவுந்தப்பாடி, ஓடத்துறை ஊராட்சி மற்றும் ஜம்பை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.208.27 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் ஆய்வு



**ஈரோடு,செப்.22-**

ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட கவுந்தப்பாடி, ஓடத்துறை ஆகிய கிராம ஊராட்சிகள் மற்றும் ஜம்பை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ. 208.27 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை செய்தியாளர் பயணத்தின் போது, கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாவட்டத்தி லுள்ள 14 ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட 225 கிராம ஊராட்சி பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. அதன் படி கலெக்டர் பவானி ஊராட்சி ஒன்றியத்திற்குட் பட்ட கவுந்தப்பாடி ஊராட்சி, சிறுவலூர் சாலையில் ஊராட்சி பொது நிதியிலிருந்து ரூ.47.78 இலட்;சம் மதிப்பீட்டில் பெருந்தலையூர் - கவுந்தப்பாடி - கெட்டிச் செவியூர் சாலை - கவுந்தப்பாடி நான்குவழிச்சாலை - சிவசக்தி மருந்தகம் முதல் - மருத்துவர் பாலசுப்பிரமணியன் வீடுவரை - கழிவுநீர் வடிகால் கட்டும் பணியினையும், நேருநகர் பகுதியில் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ரூ.19.13 இலட்சம் மதிப்பீட்டில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டும் பணியினையும், ஓடத்துறை ஊராட்சி, பாலப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 15-வது நிதிக்குழு மானியத்திட்டத்தின் கீழ், ரூ.1.99 இலட்சம் மற்றும் ரூ.1.98 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மற்றும் பள்ளி கட்டிடம் பழுதுநீக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதையும், சூரியம்பாளையம் பகுதியில் ரூ.1.89 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடம் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருதையும், வைரமங்கலம் ஊராட்சி குட்டிபாளையம் பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மைய கட்டிட மேற்கூரை பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளதையும் மற்றும்

ஜம்பை பேரூராட்சிக்குட்பட்ட ஜம்பை பகுதியில் இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.135.50 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப் பட்டு வருவதையும் என பவானி ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட கவுந்தப்பாடி, ஓடத்துறை ஆகிய கிராம ஊராட்சி பகுதிகள் மற்றும் ஜம்பை பேரூராட்சி ஆகிய பகுதிகளில் ரூ.208.27 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள் ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளை விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், கலெக்டர் பாலப்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். மேலும் அப்பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு குழந்தைகளுடன் கலந்துரையாடி அங்கன்வாடி மையத்திற்கு வருகை புரியும் குழந்தைகளின் எண்ணிக்கை மற்றும் குழந்தைகளின் எடை, உயரம் குறித்தும், குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டுவரும் உணவுகள் குறித்தும் அங்கன்வாடி பணியாளரிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, சூரியம்பாளையம் பகுதியில் மகளிர் சுய உதவிக்குழுவின் மூலம் ரூ.6.00 இலட்சம் நிதியுதவி பெற்று இயற்கை முறையில் அசோலா வளர்ப்பு மற்றும் வாழை, மஞ்சள், நெல் ஆகிய பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளதையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, இயற்கை முறையில் மேற்கொள்ளப்பட்ட விவசாய பணிகள் குறித்தும் கேட்டறிந்தார். முன்னதாக கலெக்டர் , கவுந்தப்பாடி ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் மற்றும் கனரா வங்கி இணைந்து நடத்தும், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அளிக்கப்பட்டு வரும் மசாலா பொடி தயாரித்தல் பயிற்சியினையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு மகளிர் குழுவினருக்கு அளிக்கப் பட்டு வரும் பயிற்சிகள் குறித்து தொடர்புடைய அலுவலரிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது பவானி வட்டார வளர்ச்சி அலுவலர் மாரிமுத்து, உதவிப் பொறியாளர் சந்திரசேகர், ஜம்பை பேரூராட்சித்தலைவர் ஆனந்தகுமார், செயல் அலுவலர் ரமேஷ்குமார், பவானி வட்டாட்சியர் தியாகராஜ் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடன் இருந்தனர்.



**நீலகிரி மாவட்ட கலெக்டராக பொறுப்பேற்றுள்ள மு.அருணாவை நீலகிரி மாவட்ட மதநல்லிணக்க ஒருமைப்பாடு அமைதிக்குழுவினர் தலைவர் கிருஷ்ணன், பொது செயலாளர் ஹாஜி முகம்மது அலி ஆகியோர் தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். உடன் பொருளாளர் மெக்கன்ஸ் மற்றும் உறுப்பினர்கள் உள்ளனர்.**

# விஇடி கலை அறிவியல் கல்லூரியில் பள்ளிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி



**ஈரோடு, செப். 22:**

ஈரோடு விஇடி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உடற்கல்வியியல் துறை சார்பில் கடந்த 11ம் தேதி முதல் 15ம் தேதி வரை விஇடி ஐஏஎஸ் டி20 டிராபி-2023 என்ற தலைப்பில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி பள்ளிகளுக்கு இடையே நடைபெற்றது. இதில், ஈரோடு சாரதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிஎஸ் அகாடெமி, வேலம்மாள் போதி பள்ளி, டிப்ஸ் பள்ளி, ஆர்டி இன்டர் நேஷனல் பள்ளி, நவரசம்பள்ளி, விஜய விகாஸ் பள்ளி, கார்மல் பள்ளிகளை சார்ந்த அணிகள் பங்கேற்றன. இறுதி சுற்றில் சாரதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, சிஎஸ் அகாடெமியும் தேர்வாகி விளையாடியதில் சாரதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வெற்றி கோப்பையை வென்றது. இதைத் தொடர்ந்து பரிசளிப்பு விழாவில், வேளாளர் கல்லூரியின் செயலாளரும், தாளாளருமான சந்திரசேகர் தலைமை வகித்து, வெற்றி பெற்ற அணிக்கு கோப்பைகளையும், பதக்கங்களையும் வழங்கினார். மேலும், போட்டியில் ஸ்ரீ அகில்ராஜ் என்ற மாணவன் மேன் ஆப்தி மேட்ச், சிறந்த பேட்ஸ்மேன், ஆல்ரவுன்டர் எனவும், சிறந்த பந்து வீச்சாளாராக கௌதம் கிருஷ்ணா என்ற மாணவன் தேர்வு செய்யப்பட்டு கோப்பைகள் வழங்கினார். விழாவில், வேளாளர் கல்வி அறக்கட்டளை துணை தலைவர் நல்லசாமி, நிர்வாக அலுவலர் லோகேஷ்குமார், முதல்வர் முனைவர் சரவணன், கல்விப்புல முதன்மையர் விபி. நல்லசாமி, உடற்கல்வித்துறை இயக்குநர் லெப்டினன்ட் முனைவர் சுரேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் பொது அறிவுப்போட்டி



**ஈரோடு செப் 22**

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரி நூலகம் மற்றும் வாசகர் வட்டம் சார்பில் கல்லூரி மாணவ மாணவியருக்கான பொது அறிவுப் போட்டி நடைபெற்றது.

கல்லூரித் தாளாளர் . பி. டி. தங்கவேல் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் வாசுதேவன் ஆகியோர் வழிகாட்டுதலின்படி இப் பொது அறிவுப் போட்டியை வணிக நிர்வாகவியல் (கணினி பயன்பாடு) துறைத்தலைவர் முனைவர். மஞ்சு உயிரிதொழில்நுட்பவியல் துறைத்தலைவர் முனைவர்.சரவணன் ஆகியோர் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். இந்தப் போட்டியில் மாணவ மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நூலகர் முனைவர். செந்தூர் வேல்முருகன், உதவி நூலகர் சுந்தர் மற்றும் நூலக உதவியாளர்கள் செய்திருந்தனர்.

# ஊட்டியில் ரெட் கிராஸ் சார்பில் இலவச பொது மருத்துவ முகாம்



**ஊட்டி, செப்.22-**

நீலகிரி மாவட்ட ரெட் கிராஸ் சொசைட்டி, ஆவின் உதகை, எஸ்.பி.டி. மருத்துவமனை கோவை, மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச் சங்கம், உதகை, எஸ்.எம். மருத்துவ மனை உதகை, ஈசப் வங்கி உதகை இணைந்து நடத்திய இலவச பொது மருத்துவ முகாம் உதகை ஆவின் வளாகத்தில் நடைபெற்றது. ஆவின் பொது மேலாளர் டாக்டர் ஜெயராமன் முகாமை துவக்கி வைத்தார் . ரெட் கிராஸ் சொசைட்டி சேர்மன் கேப்டன் கே.ஆர்.மணி மற்றும் மாவட்ட செயலாளர் ஆசிரியர் அ.மோரிஸ் சாந்தா குருஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் டாக்டர்.சாருக், டாக்டர் ஆகாஷ், டாக்டர் சுப்பராஜ் ஆகியோர் தங்கள் குழுவினருடன் இணைந்து முகாமை நடத்தினர். முகாமில் இ.சி.ஜி., சர்க்கரை நோய் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனைகள், இலவசமாக செய்யப்பட்டது. மருந்துகள் வழங்கப் பட்டன. முகாமில் டாக்டர் பிலிப் ராஜ், டாகடர் ரீனா, செவிலியர் மெர்லின், பாலு, சிவா மற்றும் பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் 100 - க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்தனர்

# பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரிக்கு தேசிய அளவிலான ஐஈடிஈ விருது



**ஈரோடு செப்22**

எலக்ட்ரானிக்ஸ்மற்றும்டெலிகம்யூனிகேஷன்இன்ஜினியர்ஸ்நிறுவனம் (ஐஈடிஈ)என்பதுஇந்தியாவின்அங்கீகரிக்கப்பட்டமின்னணுவியல், தொலைத்தொடர்பு,கணினிஅறிவியல்மற்றும்தகவல்தொழில்நுட்பவல்லுநர்களின்தேசியஅபெக்ஸ்நிபுணத்துவமுன்னணி அமைப்பாகும்.

இந்தியாமற்றும்வெளிநாடுகள்முழுவதும்பரவியுள்ளபல்வேறு 63 மையங்கள்மூலம்கார்ப்பரேட்,மாணவர்மற்றும்ஐஎஸ்எப் மாணவர்உறுப்பினர்கள்உட்பட 1,25,000 க்கும் மேற்பட்டஉறுப்பினர்களுக்குஇதுசேவை செய்கிறது. மின்னணுவியல்,தொலைத்தொடர்பு,கணினிஅறிவியல்மற்றும்தகவல்தொழில்நுட்பம்ஆகியதுறைகளில்சிறந்துவிளங்கும்தொழில்முறைஉறுப்பினர்கள்மற்றும்நிறுவனங்களுக்கு, ஆண்டு மற்றும் இரண்டு ஆண்டுகளுக்குஒருமுறை,ஐஈடிஈவிருதுகளை இவ்வமைப்புவழங்குகிறது.ஐஈடிஈஸ்ரீ.பி.பி. மல்ஹோத்ராமெமோரியல்விருது 2023 என்ற தேசியஅளவிலானவிருது, ஆராய்ச்சிமற்றும் மேம்பாடு, தொழில் நிறுவனகல்வித்துறைஇணைப்புகள்,தொழில்நிறுவனகூட்டாண்மை மற்றும்தொழில்நுட்பங்களைசெயல்படுத்துவதில்சிறந்துவிளங்கும்பலமையங்களைநிறுவுதல்உள்ளிட்டபொறியியல்கல்வியில்முன்னோடிமுயற்சியைமேற்கொண்டுவரும்நிறுவனத்திற்குவழங்கப்பட்டுவருகின்றது. இந்த ஆண்டு இவ்விருது, மேற்சொன்னவற்றில்சிறந்துவிளங்கும்பெருந்துறை கொங்குபொறியியல்கல்லூரிக்குவழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுவிருதுவழங்கும்விழா 26.09.2023 அன்றுபுனேயில்நடைபெற்றது. புதுதில்லிஐஈடிஈயின்தலைவர், முனைவர்.குணசேகரரெட்டி மற்றும்கவர்னிங்கவுன்சில்உறுப்பினர்கள்இந்தவிருதினைவழங்கினர்.கொங்குபொறியியல் கல்லூரி சார்பாக முனைவர்.முருகேசன், முனைவர்.மீராதேவிமற்றும்.கவின்குமார்ஆகியோர்விருதினை பெற்றனர்.

இந்தசாதனைக்காககல்லூரியின்தாளாளர்.ஏ.கே.இளங்கோகல்லூரியின்முதல்வர்முனைவர்.வீ.பாலுசாமிஉள்ளிட்டஅனைத்துபேராசிரியர்களையும்பாராட்டினார்

# பொடக்குறிச்சி வட்டாரத்தில் சொட்டுநீர் கருவிகளை பராமரிக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



**ஈரோடு செப்.22**

மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் சொட்டுநீர் கருவிகளை பராமரிக்கும் முறைகள் தொடர்பான பயிற்சி விளக்கேத்தி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் நடைபெற்றது. மொடக்குறிச்சி சா.கலைச்செல்வி, , தலைமையில் இப்பயிற்சி நடைபெற்றது. . கோபிவேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை பொறியாளர், ஜான்பிரபாகரன், சொட்டுநீர் பாசனம், பாசனத்தின் முக்கியத்துவம் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து விளக்கினார்.இந்தியா பிரைவேட் லிமிடெட் ரிவுலிஸ் இரிகேஷன் த.சந்தோஷ்குமார், வடிகட்டிகளை பராமரிக்கும் முறைகள் குறித்து செயல்விளக்கத்துடன் விவசாயிகளுக்கு காணிபித்தார். . மொடக்குறிச்சிவேளாண்மை அலுவலர்,இராஜாத்தி, வேளாண்மை - உழவர் நலத்துறை மானியத் திட்டங்கள் குறித்து தெரிவித்தார். மொடக்குறிச்சி வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரதீப்குமார் உழவன் செயலி பதிவேற்றம்,நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை மொடக்குறிச்சி உதவி தொழில்நுட்ப த.விஜயகுமார் மற்றும் செல்வி.பொ.லட்சுமி ஆகியோர் செய்திருந்தனர்.

# ஊட்டியில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம்



**ஊட்டி, செப்.22 -**

விநாயகர் விசர்ஜன ஊர்வலம் அதிமுக மாவட்டசெயலாளர் கப்பச்சி வினோத் ,வி.எச்.பி., மாவட்ட தலைவர் ரெக்ஸ்மணி தொடங்கி வைத்தனர்.

ஊட்டியில் விநாயகர் சதுர்த்தி விழாவின் போது, சிவசேனா, வி.எச்.பி., கட்சி சார்பில் விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடந்தது.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா சாலையிலிருந்து,அதிமுக மாவட்ட செயலாளர் கப்பச்சிவினோத் , சிவசேனா கட்சி மாவட்ட தலைவர் சுரேஷ்குமார், வி.எச்.பி., மாவட்ட தலைவர் ரெக்ஸ் மணி ,படுகதேச பார்ட்டி நிறுவன தலைவர் மஞ்சை மோகன் ஆகியோர் தலைமையில், க்கு மேற்பட்ட விநாயகர் சிலைகளின் விசர்ஜன ஊர்வலம் துவங்கியது. பின், நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, காமராஜர் அணையில் சிலைகள் விசர்ஜனம் செய்யப்பட்டன. விசர்ஜன ஊர்வலத்தை யொட்டி, பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டிருந்தது

